11th March 1966]

ஜமீன் ஒழிப்புச் சட்டம்

*244 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜமீன் ஒழிப்பு சட்டத்தின்படி சர்க்காரால் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கும் கிராமங்கள் எத்தனை ?

(இ) தாமதத்திற்கான காரணம் என்ன ?

THE HON. SRI V RAMAIAH : (a) Six (6).

(b) Proceedings questioning the tenure of the estates are pending before the Special Appellate Tribunal (High Court) Madras or the Supreme Court of India.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே சில கிராமங்கள் விஷயத்தில் சர்க்காருக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட செட்டில்மெண்ட் ஆபீசர் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. எந்தெந்த கிராமங்களில் அப்படிச் செய்யப்பட்டது ? இராமநாதபுரத்திலே அம்மாதிரி செய்யப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இராமநாதபுரத்தைப் பொறுத்த வரை தென்கரை, செவ்வூர் போன்ற பகுதிகளுக்குத்தான் தீர்ப்பு கூறப்பட்டது. சர்க்கார் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டம் தென்கரை கிராமத்தைச் சேர்ந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்று, ஹைக் கோர்ட் தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக வந்துவிட்டது. அதன் பேரில் அரசாங்கத்திற்கு ரெப்ரசென்டேஷன் செய்து கொண்டிருந்தும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சிவில் கோர்ட்டுக்குச் சென்று வார்த்தை வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. சர்க்கார் அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு சர்க்கார் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக்கொண்டு வருகிறது. எங்காவது சிக்கல் இருக்குமானால் அதை கனம் அங்கத்தினர் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

*245 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state how many writs have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)?

THE HON. SRI V. RAMAIAH : 235 writ petitions have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).

[11th March 1966

திரு. செ. மாதவன் : இந்த ரிட் பெட்டிஷன்கள் பைலாகி மிகுந்த நாட்கள் ஆகிவிட்டன. தனிப்பட்ட ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் கூட ரிட் பெட்டிஷன் பைல் செய்யப்படவில்லை. பொதுவாக அந்தச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகளைப் பற்றித் தான் செல்லுபடியாகுமா என க்வஸ்சன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் இதை ஒரு ஃபுல் பெஞ்சுக்கு ரெஃபர் செய்து சீக்கிரத்தில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த ரிட் பெட்டிஷன்கள் மீது சீக்கிரத்திலேயே ஹைக்கோர்ட்டார் தீர்ப்புக் கொடுப்பார்கள். அதன் பேரில் அரசாங்கம் ஆலோசனை செய்து என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளும்.

திரு. ஆ. கு. சுப்பையா : சட்டம் வந்த பிறகு மானேஜர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லையா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடம் இல்லை. சட்டப்படி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ, அதை எடுத்துக்கொள்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்திலிருந்து ரிட் மனுக்கள் வந்திருக்கின்றனவா ? தகராறு இல்லாத இடங்களிலும் கூட நோட்டிபிகேஷன் ஆகாமல் இருக்கிற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எந்த, எந்த மாவட்டத்தில் இருந்து ரிட் பெட்டிஷன் வந்திருக்கிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. மொத்தமாக வந்துள்ள எண்ணிக்கையைத்தான் குறிப்பிட்டேன். மற்ற கிராமங்களிலும் நோட்டிபிகேஷன் செய்யப்படாமல் இருக்கிறதா என்பதற்கான விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ரயத்வாரி முறையின் கீழ் வாராத இது போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு தக்காவிக் கடன், கிணற்றுக் கடன் இவை கிடைப்பது தடையாக இருக்கிறது என்று சொல்கிறார்களே, அதை விளக்கவேண்டும்.

கனம் திரு. வெ. ராமையா : இந்தச் சட்டம் வந்த பிறகு அந்தக் குறைபாடு நீங்கும்.

திரு. செ. மாதவன் : இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் நோட்டிபிகேஷன் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் 200 சொச்சம் தான் ரிட் பெட்டிஷனில் போய் இருக்கிறது. மற்ற இடங்களிலும் கூட செட்டில்மெண்டு ப்ரொசீடிங்ஸ் நடக்காமல் தயக்க நிலை ஏற்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : ஹைக்கோர்ட்டில் ஸ்டேயில் இருக்கக் கூடிய இடங்களைத் தவிர மற்ற இடங்களில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். 10914 கேஸ்கள் தான் பல தேதிகளில் நோட்டிபை ஆகியிருக்கின்றன.

11th March 1966]

திரு. செ. மாதவன் : கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தின் பேரில் பல ரிட் மனுக்கள் பைலாகி இருக்கின்றன, அவற்றை அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறது என்று எங்கேயாவது குறிப்பிட்டார்களா ? சட்டத்திலேயே ஏதாவது மாறுதல் செய்ய திட்டமிடுகிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கருத்தை நான் எங்கே வெளியிட்டேன் என்பது ஞாபகத்தில் இல்லை. இப்போது இருக்கக் கூடிய எண்ணம் சட்டத்தை துரிதமாக நிறைவேற்றவேண்டும் என்பது தான். அரசாங்கம் அதில் கவனம் செலுத்துகிறது.

246 * *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have given instructions to collect land revenue from the ryots of new Inam villages for 1374 fasli which have been taken over under the Madras Act 26 of 1963 in March 1965 ; and

(*b*) whether coercive steps have been taken to collect land revenue in these villages especially in Marudhipatti village, Thirupathur taluk, Ramnad district?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Under section 21 (*b*) of Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) land revenue is payable to the Government for fasli 1374 in respect of all lands in the new inam estate taken over in March 1965.

(*b*) Marudipatti village in Tiruppathur taluk, Ramanathapuram district, was taken over by the Government on 15th April 1965. This is one of the villages comprised in the Marudavayal group and notied in 1950 under the Rent Redduction Act. This is not a new inam estate but an existing inam estate and the rents that remain to be collected on the notified date are collected as arrears of land revenue.

No coercive steps have been taken to collect land revenue in inam estates taken over in March 1965 including Marudipatti inam estate.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சர்க்காருக்கு வந்திருக்கக் கூடிய தகவல் தப்பானது. ஆர்.ஆர். நோட்டிபிகேஷன் ஏற்கனவே கான்சல் ஆகிவிட்டது. இப்போது செய்துள்ள நோட்டிபிகேஷன்படி 1375 ஆவது பசலிக்கு 65-ஆம் ஆண்டில் இருந்துதான் வரும். 1374 ஆவது பசலிக்கு ஏற்கனவே வாரம் கொடுக்கக் கூடிய காலம் ஜனவரியில் வருமாதலால் கொடுத்துவிட்டார்கள். அப்படி இருக்க 65 ஏப்ரல் என்பது 1374 பசலிக்குள் வந்துவிடுவதால் 1374-க்கும் கிஸ்தி கட்டவேண்டும் என்று சொல்வது சரியல்ல? இதை அரசாங்கம் கவனிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : 1374 பசலிக்குள்ளேயே நோட்டிபை ஆகியிருக்கிறது. மேலும் இது புது இனாம் இல்லை. 1950-ஆம் ஆண்டே நோட்டிபை ஆன க்ரூப். ஆகவே தான் 1374-க்கு வசூலிக்கிறார்கள்.